**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண்.07/2020</u>**

**நாள்– 11.06.2026**

**வா.சா. 4 – திருமதி.சுலோச்சனா , மண்டலத் துணை வட்டாட்சியர், குமாரபாளையம்.**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் குமாரபாளையம் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமம் சர்வே எண்.539/13,14,15ல் உள்ள உட்பிரிவுகள் பற்றி ஆவணங்களுடன் சாட்சியமளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்539/13,14,15 ஆகியவற்றில் தனபால் என்பவர் செய்த விண்ணப்பத்தின் பேரில் உட்பிரிவுடன் கூடிய பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி **பட்டா மாறுதல் உத்தரவு சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உட்பிரிவிற்கு முன்பு கிரையதாரர்களின் பெயரினை பட்டாவில் சேர்க்க வேண்டி கொடுக்கப்பட்ட மனு அலுவலகத்தில் உள்ளது. சர்வே எண்.539/13ல் மட்டும் பட்டாவில் 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா மாறுதல்/1423/1504/13–14 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு **1ம் பிரதிவாதியின் பெயர் தாக்கலாகியுள்ள சிட்டா சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) சர்வே எண்.539/14,15 ஆகியவற்றில் 2019ல் உட்பிரிவு ஆகும் வரை 1ம் பிரதிவாதியின் பெயர் தாக்கல் ஆகவில்லை. அதற்கான **அ பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவை சா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒரு நிலம் கிரையம் ஆகும் போது அந்த சர்வே எண்ணின் முழு விஸ்தீரணத்தினையும் ஒரு நபர் கிரையம் பெற்று பட்டாவில் பெயரினை சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்தால் அந்தப் பட்டாவில் அந்த நபருக்கு விற்பனை செய்தவரின் பெயரினை நீக்கிவிட்டு கிரையம் பெற்றவர் பெயர் சேர்க்கப்படும். ஒரு நிலம் கிரையம் ஆகும் போது அந்த சர்வே எண்ணின் பகுதி விஸ்தீரணத்தினை ஒரு நபரிடமிருந்து கிரையம் பெற்று பட்டாவில் பெயரினை சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்தால் அந்தப் பட்டாவில் அந்த நபருக்கு விற்பனை செய்தவரின் பெயரும் கிரையம் பெற்ற நபரின் பெயரும் கூட்டுப்பட்டாதாரர்களாக சேர்க்கப்படும். அவ்வாறு கிரையம் பெற்றவரின் பெயரினை பட்டாவில் சேர்க்கும் முன் சங்கிலித் தொடர் உள்ளதா என்று சரிபார்க்கப்பட்டு அவ்வாறு

சங்கிலித்தொடர் இருந்தால் மட்டுமே பட்டா பெயர் மாற்றம் செய்யப்படும். அவ்வாறு சங்கிலித் தொடர் இல்லாவிட்டால் அந்தக் காரணத்தினைக் குறிப்பிட்டு பட்டா மாறுதல் நிராகரிக்கப்படும்.

3) ஒரு சர்வே எண்ணில் பட்டா மாறுதல் செய்த பின்னிட்டு சர்வே எண்களை உட்பிரிவு செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டால் நான்கு புற எல்லைதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு நிலம் சர்வேயர் மூலம் அளவீடு செய்யப்பட்டு, முதுநிலை வரைவாளர் அதனை கூறாய்வு செய்து வட்டத்துணை ஆய்வாளர் கூறாய்வு செய்து வட்டாட்சியர் சர்வே எண்ணினை உட்பிரிவு செய்வார். சர்வே எண்.539/13,14,15 ஆகியவற்றில் உட்பிரிவு செய்யப்படும்போது நான்கு எல்லைப் பட்டாதாரர்களுக்கு வழங்கப்பட்ட அறிவிப்பு எதுவும் கோப்புகளில் இல்லை. சர்வே எண்.539/14,15 ஆகியவற்றினை உட்பிரிவு செய்ய வேண்டி குறிப்பிட்டு உத்தரவு எதுவும் கோப்புகளில் இல்லை. கிரையப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 4 புற எல்லைகளின் அடிப்படையில் தான் இடம் அடையாளம் காணப்படும். அதுவும் சங்கிலித் தொடரில் சரிபார்க்கப்படும். சங்கிலித் தொடரில் சரியாக 4 எல்லைகளையும் குறிப்பிடாத இடத்தினையும் சேர்த்து உட்பிரிவு செய்யப்பட்டால் அது தவறு.

<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) சர்வே எண்.539/13,14,15 ஆகியவற்றில் செய்யப்பட்ட உட்பிரிவு தவறு என்று வாதியிடமிருந்து மனு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பட்டா மாறுதலும், உட்பிரிவும் தவறு என்றால் வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்யப்படும் என்றால் சரிதான். அவ்வாறு மேல்முறையீடு செய்ய 30 நாட்கள் கால அவகாசம் என்றால் சரிதான். சர்வே எண்.539/13,14,15 உட்பிரிவு செய்யப்படும் முன்பு சர்வே எண். 539/13,14,15 என்று தான் இருந்தது என்றால் சரிதான்.

2) 1ம் பிரதிவாதியின் பெயர் சர்வே எண்.539/13ல் உட்பிரிவு செய்யப்படும் முன்பு கூட்டுப்பட்டாதாரராக குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தினை உட்பிரிவு செய்ய வேண்டி மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள நிலங்கள் சர்வே எண்.539/13பி, 539/14பி, 539/15பி என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். உட்பிரிவு செய்ய வேண்டி 1ம் பிரதிவாதி

தாக்கல் செய்த மனு எவ்வாறு பரிசீலனை செய்யப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி இணையத்தில் தாக்கல் செய்த மனு சம்பந்தப்பட்ட நில அளவையருக்கு சென்ற பின்னிட்டு நில அளவையர் அளவீடு செய்து வரைபடம் தயார் செய்து முதுநிலை வரைவாளர் மற்றும் வட்டத்துணை ஆய்வாளர் ஆகியோர் பரிசீலனை செய்த பின்னிட்டு வட்டாட்சியருக்கு அனுப்பப்படும். வட்டாட்சியர் ஆவணங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் உட்பிரிவு செய்வார் என்றால் சரிதான்.

3) இதுநாள்வரை அவ்வாறு செய்யப்பட்ட உட்பிரிவு தவறு என்றோ, சரி இல்லை என்றோ மனு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பட்டா மாறுதல் மற்றும் உட்பிரிவு செய்யப்பட்ட உத்தரவு எண் என்ன என்றால் 06.09.2019 தேதியிட்ட டி.ஆர்.2019/09/07/000399SD ஆகும். எனவே சர்வே எண்.539/13,14,15 ஆகியவை பட்டா மாறுதல் செய்யப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டது சரி என்றால் சரி என்று அப்போதைய வட்டாட்சியரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

<u>வாதி தரப்பு மறுவிசாரணை</u>

1) சர்வே எண்.539/13,14,15 ஆகியவற்றிற்கான கோப்புகளில் அவற்றிற்கான முன் ஆவணங்கள் உள்ளதா என்றால் 1ம் பிரதிவாதியின் கிரையப் பத்திரமும் வில்லங்கச் சான்றிதழும் உள்ளது. 2019ம் ஆண்டு வரை 1ம் பிரதிவாதியின் பெயரில் சர்வே எண்.539/14,15 ஆகியவற்றில் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.539/14,15 ஆகியவற்றிற்கான பட்டா எண்.738ன் படி வாதியின் பெயர் தனியாக தாக்கல் ஆகி உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தவர் பெயர் என்ன என்றால் கணேசன் குமாரர் திரு.G.பூபதி ஆவார். சர்வே எண்.539/14,15ற்கான சங்கிலித் தொடருக்கான ஆவணங்களை சரிபார்க்காமல் 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா மாறுதல் மற்றும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அப்போதைய வட்டாட்சியர் உட்பிரிவு கோப்புகளில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் உட்பிரிவு செய்துள்ளார். நான் சங்கிலித் தொடர் ஆவணங்கள் இல்லாமல் உட்பிரிவு செய்வேனா என்றால் இல்லை.